**செய்தி வெளியீடு எண்: 377** **நாள்: 07.05.2010**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

இந்திய அரசாங்கம் இவ்வாண்டின் மையக் கருத்தாக " நிதி குறித்த அறிவைப் பெறுவீர்; உங்கள் முதலீட்டை பாதுகாப்பீர் " என அறிவித்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் துறையான உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு, பாண்டிச்சேரி நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பு - ஃபெட்காட் என்ற அமைப்புடன் இணைந்து " பாதுகாப்பான முதலீடு" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் ஒன்றை நடத்தவிருக்கின்றது. இக்கருத்தரங்கம் 08/05/2010 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் காலை 09.30 மணி முதல் தொடர்ந்து நடைபெறும். குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களின் ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர்கள், குடியிருப்போர் நல சங்க ஆர்வலர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். உரிய அரசு துறை / வங்கி அலுவலர்கள் முதலீடு பாதுகாப்பு குறித்து பல்வேறு தலைப்புகளில் பேச உள்ளனர். நிதி முதலீட்டில் நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்த உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நடத்தும் கருத்தரங்கில் கலந்து பயன்பெற தமிழ்நாடு அரசு அழைப்பு விடுக்கிறது.

ஆணையாளர்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**வெளியீடு:–** **இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை–9.**